# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1145/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சந்திரசேகரன் | த-பெ | சேது |
| ஊர்: | : | தேவக்கோட்டை | | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2026**

**எதிரிகள் ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் தேவக்கோட்டையில் வசித்து சார்பு ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக 30.05.2019 அன்று 13.00 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது கண்ணாத்தாள் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 167/2019 பிரிவுகள் 294(b), 323, 506(2), 379, 4 of TNPHW Act ன் இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 5.** பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் நாராயணன் மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 6. பார்வை மகஜர் அசாஆ 7.** பின்னர் அன்றைய தினமே சம்பவ இடத்தில் 14.15 மணிக்கு வழக்கு சொத்தினை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். **அத்தாட்சி மகஜர் அசாஆ 8.**

2. பின்னர் வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடி சென்ற நிலையில் எதிரி பிரபு என்பவர் ஆரியபவன் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தவரை அன்னைற தினம் 16.00 மணிக்கு வழக்கின் குற்ற காணரம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்தினை படிவம் 95 ல் ஆஜர் செய்து கனம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **படிவம் 95 அசாஆ 9. இருசக்கர**

**வாகனம் சா.பொ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் பிற எதிரிகளை தேடி சென்ற நிலையில் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமீன் பெற்றுவிட்ட காரணத்தால் அவர்களை கைது செய்யமுடியவில்லை. பின்னர் வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 22.06.2019 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்படி சாலையின் பொது இடங்களில் ஆடு மேய்ப்பது சட்டப்படி குற்றம் என்ற விபரம் தெரியுமா என்றால் அது குறித்து தெரியாது. பொது இடங்களில் ஆடுகளை மேய்ப்பதற்கு மாண்புமிகு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் புகார்தாரர் பொது இடங்களில் ஆடுகளை மேய்த்ததால் தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. தற்போது வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது அசா1 எதிரிகள் அனைவரும் சமாதானமாக சென்று விட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கினை சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.10 17:17:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.